

பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற கழக வெற்றி வேட்பாளர் மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தனது குடும்பத்துடன் மோளையானூர் வாக்குச்சாவடியில் வாக்கு செலுத்தினார்.



கழக மகளிர் அணி துணை செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சிஎஸ்ஐ பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



பல்லடம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் கொங்குநகர் ஸ்ரீ வெங்கடாசலபதி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டி.இந்திராணி சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் வள்ளி வித்யாலயா பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரிசையில் நின்று வாக்களித்தார்!

திருச்சி, ஏப்.24-

தமிழக சட்டமன்ற திருவெறும்பூர் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிடும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நேற்று (ஏப்ரல் 23, 2026) தனது வாக்கைச் செலுத்துவதற்காக, திருச்சி வரகனேரியில் உள்ள டி.எஸ்.எம். (TSM) மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில், தனது மனைவி ஜனனியுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற தயாரகவுள்ளனர்.

சாதாரண குடிமகனாக அமைச்சரும் அவரது மனைவியும் 30 நிமிடங்களுக்கு மேலாக வரிசையில் காத்துக் கிடப்பது, அனைவருக்கும் சமமான அரசியல் அங்கீகார சமநிலையை காட்டுவதாக அமைந்துள்ளது.

வாக்களித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர் குறிப்பிட்ட முக்கியத் தகவல்கள் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய மனநிறைவு

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பள்ளிகளுக்கு ஆய்விற்காகச் சென்ற தான், இன்று ஒரு வாக்காளராகப் பள்ளியில் வரிசையில் நின்று கொண்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டார். கடந்த 15 நாட்களாகத் திருவெறும்பூர் தொகுதியில் மேற்கொண்ட



தேர்தல் பிரச்சாரம் குறித்து அவர் பேசுகையில்:

மாறிய நிலை: 20162021 காலகட்டத்தில் எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தபோது, மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து என்னை வழிமறித்தனர். ஆனால், 20212026 காலகட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்து அவர்களின் எண்ணற்ற கோரிக்கைகளை நிறைவேற்றிய மனநிறைவுடன் தற்போது மக்களைச் சந்தித்துள்ளேன்.

மனுக்களின் எண்ணிக்கை: பிரச்சாரத்தின் போது வெறும் 32 மனுக்கள் மட்டுமே மக்களிடமிருந்து வந்தன. அந்த மனுக்களிலும் "நாங்கள் கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நன்றி" என்ற வாசகங்களே முதன்மையாக இருந்தன. மீதமுள்ள சில கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு மக்கள் அன்புடன் கேட்டுக்கொண்டனர்.

மகளிர் ஆதரவும் 'வெல்வோம் 200' இலக்கும்

தமிழக முதல்வரின் ஓய்வறியா உழைப்பிற்குத் தமிழகப் பெண்களும், தாய்மார்களும் பெரும் ஆதரவு அளித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

"பெண்களின் ஆதரவு எந்த இயக்கத்திற்கு இருக்கிறதோ, அந்த இயக்கத்தின் வெற்றி உறுதி. தமிழக முதல்வர் கூறியது போல, வரவிருக்கும் தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற்று திமுக புதிய வரலாறு படைக்கும் என்பது நிச்சயம்," என்று அவர் உறுதியளித்தார்.

திருச்சி கிழக்கு தொகுதி குறித்து

திருச்சி கிழக்குத் தொகுதி வேட்பாளர் இனிக்கோ இருதயராஜ் குறித்துப் பேசிய அமைச்சர், அவர் ஒரு ஓய்வறியாத உழைப்பாளி என்றும், உழைப்பவர்களைத் தமிழக மக்கள் என்றும் கைவிட்டதில்லை என்றும் குறிப்பிட்டார். முதல்வரின் மக்கள் நலத் திட்டங்களால், திருச்சி கிழக்குத் தொகுதியில் திமுக கூட்டணி வேட்பாளர் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



அரியலூர் மாவட்டம் தா. பழூர் ஒன்றியம் ஜெயங்கொண்டம் கண்டியங்கொல்லை தமது சொந்த கிராமத்தில் க.சொ.க. கண்ணன் தனது குடும்பத்தினருடன் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தனது வாக்கினை செலுத்தினார்.

### முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

# 'தமிழியல் கலைக் களஞ்சியம்' வெளியீட்டு விழா!

### முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.24-

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் 'தமிழியல் கலைக் களஞ்சியம்' வெளியீட்டு விழா நாளை (25.4.2026) மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார்.

சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கோகுலநாதர் இந்து மகாஜன தனியார் பள்ளியில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. தனது குடும்பத்துடன் வாக்கினை பதிவு செய்தார். அப்போது மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் உடனிருந்தார்.

# தமிழ்நாட்டில் ஏப்.26ஆம் தேதி வரை வெப்பம் நீடிக்கும்!

புதுடெல்லி,ஏப்.24-

வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு இந்தியாவின் முக்கிய பகுதிகளில் அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு வெப்ப அலை நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பஞ்சாப், ஹரியாணா, சண்டிகர் மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வெப்ப அலை நிலவ வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 25 வரையிலும், கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 22 முதல் 26 வரையிலும், ராஜஸ்தானில் ஏப்ரல் 24 முதல் 26 வரையிலும், மத்தியப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 26 வரையிலும், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் ஏப்ரல் 24 முதல் 27 வரையிலும், மேற்கு வங்கம், பிஹார் மற்றும் ஜார்க்கண்டில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளிலும் வெப்ப அலை நிலவக் கூடும்.ஒடிசா, கடலோர ஆந்திரப் பிரதேசம், ஏனாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கடலோர கர்நாடகா மற்றும் குஜராத்தின் கடலோரப் பகுதிகளின் ஆங்காங்கே உள்ள சில இடங்களில் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 25 வரையிலான காலகட்டத்தில் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

இந்தக் காலகட்டத்தில், ஹரியாணா, சண்டிகர், டெல்லி, ஒடிசா, கொங்கண் மற்றும் கோவாவில் இரவுகளிலும் வெப்பமான வானிலை இருக்கக் கூடும்.

இதற்கிடையில், வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில், இந்த வாரத்தில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

'தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இன்று முதல் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்' என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் பீளமேடு சர்வோஜனா பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா புலவர் வேங்கைமார்பன்

ஏப்ரல் 24 (1985)



அன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் கழகப் பிரச்சாரக்குழு தலைவராகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், அறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறுப் போராட்டங்களில் பங்கேற்றதுடன், 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூரில் ஓராண்டு சிறைவாசமும் – நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னையில் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஐ. வெங்கட்ராமன்

ஏப்ரல் 24 (2020)



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகர அமைப்பு துவங்கப்பட்டபோதே, அதன் முதல் செயலாளராகவும் – ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கழக அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

திருவொற்றியூர் எண்ணூர் தொழிற்சங்கப் பேரவையை முதன்முதலாக துவக்கியதோடு, நகர்மன்ற துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி, சைதாப்பேட்டை நிலவள வங்கி, அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்தவர்.

"திசை மாறாத பறவை" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.